## சுருக்கம்

வேளாண்மைத் துறை – தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும், கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களின் டெல்டா பகுதிகளிலும், சம்பா தொகுப்புத் திட்டம், 2017 – செயல்படுத்திட ரூ.41.15 கோடி நிதி ஒப்பளிப்பு –ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மை (வேஉ.2) துறை

அரசாணை (நிலை) எண். 259

நாள்: 21.10.2017
ஹேவிளம்பி வருடம், ஐப்பசி, 4
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.144, வேளாண்மை (வேஉ.2) துறை, நாள்.13.6.2017.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.நெ&சி1/95033/2017, நாள். 07.09.2017, 23.9.2017 மற்றும் 3.10.2017.
3. அரசு கடித (நிலை) எண். 233 வேளாண்மை (வேஉ1) துறை நாள்.14.09.2017

---

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, காவேரி டெல்டா பாசனப் பகுதிகளில் குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டம் 2017, ரூ.56.92 கோடி செலவில் செயல்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது.

2. கடந்த ஓராண்டாக காவிரி நதியில் விவசாயம் செய்ய போதுமான நீர் இல்லாத காரணத்தினாலும், நிலத்தடி நீர் குறைந்த காரணத்தினாலும், டெல்டா மாவட்ட விவசாயிகளின் சம்பா நெல் சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, சம்பா பருவ சாகுபடிக்காக மேட்டூர் அணையினை 2017 அக்டோபர் 2ம் தேதி திறக்க உள்ள நிலையிலும், பரவலாகப் பெய்து வரும் மழையினைக் கருத்தில் கொண்டும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட ரூ.41.15 கோடி மதிப்பீட்டில் சம்பா தொகுப்பு திட்டம் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும், கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களின் டெல்டா பகுதிகளிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும். இதன்படி விவசாயிகள் நேரடி நெல் விதைப்புக்கான தரிசு உழவுப் பணியினை மேற்கொள்வதற்காக, தரிசு உழவுப் பணிகளுக்கு மானியமாக, ஏக்கருக்கு ரூ.500/– வீதம் 5 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கும், விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகள் பெற ஏதுவாக நெல் விதைகளுக்கு மானியமாக கிலோ ஒன்றிற்கு ரூ.10/– வீதம், 4500 மெ.டன் விதைகள் விநியோகிக்கவும், நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளும் இடங்களில், களை பாதிப்பு அதிகளவு இருக்கும் என்பதால், களைக்கொல்லி மருந்து தெளிக்க, ஏக்கருக்கு ரூ.280/– வீதம் 2.5 இலட்சம்

த.பி.பா

ஏக்கர் பரப்பிற்கும், நெல் சாகுபடிக்கான ஆயத்த பணிகளான உழவு மற்றும் நடவு மேற்கொள்ளும் வகையில் நிலத்தினை தயார்படுத்த 620 இயந்திர உழுவைகள் வழங்கும் பொருட்டு, இயந்திரம் ஒன்றுக்கு மானியமாக ரூ.75,000/– வீதம் மானியமாக வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.9.2017 அன்று அறிவிப்பு செய்தார்கள்.

3. சம்பா சாகுபடி திட்டத்தினை செயல்படுத்திட தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து ரூ.31.75 கோடி (2015–2016ம் ஆண்டில் ஆவின் நிறுவனத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ.5.00 கோடியினை திரும்பச்செலுத்தியது உட்பட), தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்திலிருந்து ரூ.2.80 கோடி, வேளாண் விரிவாக்க மறுசீரமைப்பு திட்டத்திற்கான துணை இயக்க நிதி (ATMA) ரூ. 3.00 கோடி, விதை மற்றும் நடவு பொருள்களுக்கான துணை இயக்க நிதி ரூ.2.50 கோடி, 2017ம் ஆண்டின் குறுவை தொகுப்பு திட்டத்தில் செலவிடப்படாத நிதி ரூ.1.10 கோடி ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

4. மேலும், திட்ட இனங்களில் நிதி சேமிப்பு ஏதும் இருப்பின், ஒப்புதல் வழங்கப்பட்ட திட்ட இனங்களில், கூடுதல் பரப்பில் செயல்படுத்த அனுமதியும், வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின் திருத்திய / இறுதி நிதி ஒதுக்கம் 2017–18ல், நிதியினைப் பெற்று செலவிட வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரமும், மானியத் தொகையை விடுவிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் / வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்கிட வேளாண்மை இயக்குநருக்கு அனுமதியும், திட்ட இனங்களை செயல்படுத்தும் வழிகாட்டு நெறிமுறைக்கு அனுமதியும் வழங்கும்படி கோரியுள்ளார்.

5. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து, அக்கருத்துருவை ஏற்று, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களிலும் கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள டெல்டா பகுதிகளிலும் நேரடி நெல் விதைப்பினை பெருமளவில் மேற்கொள்ளும் பொருட்டு விவசாயிகளை ஊக்கப்படுத்திட ரூ 41.15 கோடி (ரூபாய் நாற்பத்தி ஒரு கோடியே பதினைந்து லட்சம்) மதிப்பீட்டில் சம்பா தொகுப்பு திட்டத்தினை செயல்படுத்திட அரசு ஆணை வெளியிடுகிறது. இதன்படி,

i. விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்வதற்காக தரிசு உழவுப் பணிகளுக்கு மானியமாக ஏக்கருக்கு ரூ.500/– வீதம், 5 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு மானியமாக ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ii. விவசாயிகள் தரமான சான்று பெற்ற நெல் விதைகள் பெற ஏதுவாக நெல் விதைகளுக்கு மானியமாக கிலோ ஒன்றிற்கு ரூ. 10/– வீதம் 4500 மெ.டன் விதைகள் விநியோகிக்க ரூ.4.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

iii. நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளும் இடங்களில் களை பாதிப்பு அதிகளவு இருக்கும் என்பதால் களைக் கொல்லி மருந்து தெளிக்க, ஏக்கருக்கு ரூ.280/– வீதம் 2.50 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு மானியமாக ரூ7.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

iv. விவசாயிகள் நெல் சாகுபடிக்கான ஆயத்த பணிகளான உழவு மற்றும் நடவு மேற்கொள்ளும் வகையில் நிலத்தினை தயார்படுத்த 620 இயந்திர உழுவைகள் (Power Tillers) வழங்கும் பொருட்டு, இயந்திரம் ஒன்றுக்கு மானியமாக ரூ.75,000/– வீதம் வழங்க, ரூ. 4.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

6.மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்கு தலைப்புகளில் பற்று வைக்கப்படும்:-

1. **National Agricultural Development Programme (NADP) Rs.31.75 crore**

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount proposed (Rs in Crore) |
|---|---|---|---|---|
| 2401 – 00 - Crop Husbandry - 800 other expenditure – Schemes Shared between State and Centre – UF – National Agriculture Development Programme (NADP-RKVY) Agriculture Department. | 11 Subsidies | 01 Individual based Subsidy | 2401-00-800-UF-1111 | 25.126 |
| 2401 – 00 - Crop Husbandry – 789 Special component plan for Scheduled Castes – Schemes Shared between State and Centre – UN – National Agriculture Development Programme (NADP - RKVY) under Special component plan – Agriculture department | 11 Subsidies | 01 Individual based Subsidy | 2401-00-789-UN-1111 | 6.350 |
| 2401 – 00 - Crop Husbandry – 796 Tribal area Sub Plan – Schemes Shared between State and Centre – UJ – National Agriculture Development Programme (NADP - RKVY) Agriculture department | 11 Subsidies | 01 Individual Based Subsidy | 2401-00-796-UJ-1114 | 0.274 |
| **Total** | | | | **31.750** |

2. **National Mission on Agricultural Extension and Technology- Submission on Seed and planting material (Seed Village) (NMAET) (SMSP)**

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount proposed (Rs. In crore) |
|---|---|---|---|---|
| 2401 -- 00 - Crop Husbandry 102- Food Grain Crop - Schemes shared between State and Centre - UC- Production and Distribution of Quality Seeds | 09 Grants –in-Aid | 03 Grants for specific schemes | 2401-00--102-UC-0930 | 2.00 |

த.பி.பா

| | | | | |
|---|---|---|---|---|
| 2401 – 00 - Crop Husbandry 789 - Special component plan for Scheduled Castes - Schemes Shared Between State and Centre- UR - Production and Distribution of Quality Seeds | 09 Grants –in-Aid | 03 Grants for specific schemes | 2401-00-789 UR-0936 | 0.50 |
| **Total** | | | | **2.50** |

3. **National Mission on Agricultural Extension and Technology**

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount (Rs in crore) |
|---|---|---|---|---|
| 2401 - 00 - Crop Husbandry – 109 – Extension and Farmers Training – Schemes Shared between State and Centre – UC – National Mission on Agricultural Extension and Technology. | 09- Grants–in-Aid | 03- Grants for Specific Schemes | 2401-00-109-UC-0936 | 2.430 |
| 2401 - 00 - Crop Husbandry – 789 Special Component Plan for Scheduled Castes - Schemes Shared between State and Centre – UI State Extension Programme for Extension Reforms | 09- Grants–in-Aid | 03- Grants for Specific Schemes | 2401-00-789-UI-0934 | 0.540 |
| 2401 - 00 - Crop Husbandry – 796 – Tribal Area Sub-Plan - Schemes Shared between State and Centre – UB – State Extension Programme for Extension Reforms | 09- Grants–in-Aid | 03- Grants for Specific Schemes | 2401-00-796-UB-0933 | 0.030 |
| **Total** | | | | **3.000** |

4. **National Food Security Mission- Rice-2017-2018**

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount (Rs in crore) |
|---|---|---|---|---|
| 2401 - 00 - Crop Husbandry – 112 Development of Pulses – Schemes shared between State and Centre - UB - National Food Security Mission | 09- Grants–in-Aid | 03- Grants for Specific Schemes | 2401-00-112-UB-0931 | 2.240 |

த.பி.பா

| | | | | |
|---|---|---|---|---|
| 2401 - 00 - Crop Husbandry – 789 Special Component Plan for scheduled Castes - Schemes shared between State and Centre - US - National Food Security Mission | 09- Grants–in-Aid | 03- Grants for Specific Schemes | 2401-00-789-US-0934 | 0.532 |
| 2401 - 00 - Crop Husbandry – 796 Tribal Area Sub-Plan - Schemes shared between State and Centre - UN - National Food Security Mission | 09- Grants–in-Aid | 03- Grants for Specific Schemes | 2401-00-796-UN-0939 | 0.028 |
| **Total** | | | | **2.800** |

5. **State Fund**

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount (Rs in crore) |
|---|---|---|---|---|
| 2401 - 00 - Crop Husbandry – 105 – Manures and Fertilizers State's Expenditure – JS – Kuruvai Special Package for Cauvery Delta Districts | 11 Subsidies | 01 Individual Based Subsidy | 2401-00-00-105-JS-1110 | 1.100 |

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2,57,62,900/– வரும் 2017–18ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. இதுகுறித்து சட்டப்பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் குறிப்பிட்டு சேர்த்திடல் வேண்டும். 2017–18ம் ஆண்டிற்கான திருத்திய / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும், மேலும் இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினையும் உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொ.1)துறைக்கு அனுப்புமாறு வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை, கீழ்க்கண்ட திட்டங்களிலிருந்து செலவிட அனுமதி வழங்கப்படுகிறது:-

| வ. எண் | திட்டம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் (NADP) | 26.75 |
| 2. | தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ஆவின் நிறுவனத்தால் செலவிடப்படாத தொகை (அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டது) | 5.00 |

| | | |
|---|---|---|
| 3. | தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (NFSM) | 2.80 |
| 4. | வேளாண் விரிவாக்க மறு சீரமைப்புத்திட்டம் | 3.00 |
| 5. | விதைகள் மற்றும் நடவு பொருட்களுக்கான துணை இயக்கம் (SMSP) | 2.50 |
| 6. | குறுவைத்தொகுப்புத் திட்டத்தில் செலவிடப்படாத தொகை (மாநில நிதி) | 1.10 |
| | மொத்தம் | 41.15 |

(ரூபாய் நாற்பத்தொன்று கோடியே பதினைந்து இலட்சம்)

மேற்கண்ட திட்டங்களிலிருந்து நிதியினை பயன்படுத்துவது தொடர்பாக அந்தந்த திட்ட மாநில அளவிலான திட்ட ஒப்பளிப்பு குழுக்களின் பின்னேற்பு பெற வேளாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலும், கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களின் டெல்டா பகுதிகளிலும், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள வழிகாட்டு நெறிமுறையின்படியும், 2017–ஆம் ஆண்டில் சம்பா சாகுபடித் தொகுப்புத் திட்டத்தினை செயல்படுத்திட வேளாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. சம்பா சாகுபடித் தொகுப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் பொழுது, இத்திட்ட இனங்களில் ஏதேனும் நிதி சேமிப்பு ஏற்பட்டால், அதனை கூடுதல் பரப்பிற்கு பயன்படுத்திக் கொள்ளவும், சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் / வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களுக்கு மானியத் தொகையை விடுவிக்க வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

11. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அத்துறையின் அ.சா.எண்.52651/ நிதி(வேளாண்மை)/2017–1, நாள்: 21.10.2017, கூடுதல் ஒப்பளிப்பு பேரேடு எண்.1681 (ஆயிரத்து அறுநூற்று எண்பத்தி ஒன்று)–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை –5.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை–32.
தலைமைப் பொறியாளர்( வேளாண்மை பொறியியல்), சென்னை–35
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு/தெற்கு) சென்னை –8 /35 (பெயரில்)
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, அரியலூர், கரூர், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்கள்.
கருவூல அலுவலர்கள் – உரிய மாவட்டங்கள்.
முதன்மை மாநில கணக்காயர் (A&E/G&SSA/E&RA/AAD),சென்னை –18. (பெயரில்)

த.பி.பா

<u>நகல்</u>
விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர், கோயம்புத்தூர்–13.
இயக்குநர், STAMIN, குடுமியான்மலை, புதுக்கோட்டை மாவட்டம்.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்–3.
நிதி (Agri./BG.I/BG.II) துறை, சென்னை –9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலரின் தனிச் செயலர், வேளாண்மைத் துறை, சென்னை –9.
வேளாண்மை (அநமு.3 / வேஉ.1 / வேஉ.3 / வேபொ.1) துறை, சென்னை –9.
கணினி விவரத் தொகுப்பாளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்
21/10/17

அரசாணை (நிலை) எண். 259, வேளாண்மை (வே.உ.2)த் துறை, நாள் 21.10.2017

## இணைப்பு

## டெல்டா மாவட்டங்களில் சம்பா தொகுப்புத் திட்டம் 2017 ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines)

1) நேரடி நெல் விதைப்பிற்கு தரிசு உழவுப் பணிக்கான மானிய தொகை (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.500/–)

1. தரிசு உழவுப் பணியினை மேற்கொள்வதற்கு, வேளாண்மை உதவி அலுவலர்கள் விவசாயிகளின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
2. உழவுப் பணிக்கான மானியத் தொகை பெறுவதற்கான பயனாளிகள் பட்டியல் தயார் செய்யும் பொருட்டு, உழவு செய்யப்பட்ட பரப்பு மற்றும் நாள் ஆகிய விவரங்களுடன் வேளாண்மை உதவி அலுவலர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும்.
3. வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர், உழவு மேற்கொள்ளப்பட்ட பரப்பளவினை ஆய்வு செய்து, உரிய சான்றுடன் வேளாண்மை உதவி இயக்குநரிடம் மானியத் தொகை பெறுவதற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.
4. உழவு முடிந்து ஆய்வு மேற்கொண்ட பின், விவசாயிகள் உழவுப் பணி மேற்கொண்டதற்கான செலவுப்பட்டியல், வங்கி கணக்கு எண், வங்கிக்கணக்குப் புத்தகத்தின் நகல் மற்றும் உழவின்போது, விவசாயியுடன் சேர்த்து எடுத்த புகைப்படத்துடன் அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.
5. உதவித்தொகையானது பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக (ECS மூலம்) செலுத்தப்படவேண்டும்.
6. உழவுப் பணி மானியம் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை வழங்கலாம்.
7. குத்தகை விவசாயிகளுக்கு உரிய சான்றிதழை சரிபார்த்து உதவித் தொகை வழங்கலாம்.

2) சான்று விதை விநியோகம்: (கிலோ ஒன்றுக்கு ரூ.10/–)

1. வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேவையான சான்று பெற்ற மத்திய கால இரகங்களான ஏடிடீ–38, ஏடிடீ–39, ஏடிடீ–44, ஏடிடீ–46, ஏடிடீ–49, ஏடிடீ–50, டிகேஎம்–13, கோ–43, கோ–48, கோ–49, கோ–50, என்எல்ஆர்–34449, ஸ்வர்ணா சப்–1, டிஆர்ஒய்–3, ஜெஜிஎல்–1798, ஏஎஸ்டி–19, மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி மற்றும் டிஆர்ஒய்–1 மற்றும் குறுகிய கால இரகங்களான கோ–51, ஏடிடீ–36, ஏடிடீ–37, ஏடிடீ–43, ஏடிடீ–45, ஏஎஸ்டி–16, மற்றும் அண்ணா–4 ஆகிய நெல் இரகங்களை இருப்பு வைத்து விநியோகம் செய்ய வேளாண்மை உதவி இயக்குநர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. வேளாண்மை உதவி அலுவலர், விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று, வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் பரிந்துரையுடன் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்ய வேண்டும்.
3. வேளாண்மை விரிவாக்க மையங்கள் வாயிலாக அதிகபட்சமாக, ஒரு ஏக்கருக்கு 20 கிலோ விதை வழங்கலாம்.
4. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கருக்கு தேவையான விதைகளை மட்டுமே வழங்க வேண்டும்.

த.பி.பா

3) <u>களைக்கொல்லி உபயோகத்திற்கான மானியத் தொகை : (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.280/–)</u>

1. விவசாயிகள் களைக்கொல்லி வாங்கியதற்கான பட்டியலுடன் கூடிய உரிய விண்ணப்பத்தினை வேளாண் உதவி அலுவலர்கள் பெறவேண்டும்.
2. வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர், களைக்கொல்லி பயன்பாட்டினை ஆய்வு செய்து, உரிய சான்றுடன் பயனாளியின் வங்கிக் கணக்கு எண், வங்கிக்கணக்குப் புத்தகத்தின் நகல் மற்றும் களைக்கொல்லி உபயோகத்தின் போது விவசாயியுடன் சேர்த்து எடுத்த புகைப்படத்துடன் வேளாண்மை உதவி இயக்குநரிடம் மானியத் தொகை பெறுவதற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.
3. களைக்கொல்லி உபயோகத்திற்கான அதிகபட்ச மானியமாக ஏக்கருக்கு ரூ.280/– பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படவேண்டும்.
4. களைக்கொல்லி மானியம் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை வழங்கலாம்.

4) <u>இயந்திர உழுவைகள் (பவர் டில்லர்) வழங்குதல் (இயந்திரம் ஒன்றுக்கு 50 சதவிகிதம் மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.75000/–)</u>

1. வேளாண் பொறியியல் துறை பட்டியலிடப்பட்ட நிறுவனம் மற்றும் விலைப்புள்ளியின் அடிப்படையில் இயந்திர உழுவைகள் விநியோகம் செய்யப்படவேண்டும்.
2. உழுவை இயந்திரங்கள் (பவர் டில்லர்) பெறுவதற்கு உதவி வேளாண்மை அலுவலர் விவசாயிகளிடமிருந்து முன்பணப்பட்டியல் மற்றும் முழுத் தொகைக்கான வரைவோலையுடன் கூடிய விண்ணப்பம் பெற வேண்டும்.
3. வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர், பவர் டில்லர் பெறப்பட்டதினை ஆய்வு செய்து, உரிய சான்றுடன் பயனாளியின் வங்கி கணக்கு எண், வங்கிக்கணக்குப் புத்தகத்தின் நகல் மற்றும் உழுவை இயந்திரத்துடன் விவசாயி சேர்ந்து எடுத்த புகைப்படத்துடன் வேளாண்மை உதவி இயக்குநரிடம் மானியத் தொகை பெறுவதற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.
4. இயந்திரம் ஒன்றுக்கு 50 சதவிகிதம் மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.75000/– பின்னேற்பு மானியமாக விவசாயியின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட வேண்டும்.

<u>5) பொது</u>

1. சம்பா பருவ தொடக்கம் முதல் நெல் சாகுபடி மேற்கொண்ட அனைத்து விவசாயிகளும் இத்தொகுப்புத்திட்ட இனங்களின் மானியம் பெற தகுதியுடையவர் ஆவர்.
2. இத்திட்ட இனங்களுக்கான மானியத் தொகையினை உரிய திட்டக் கணக்கு தலைப்பில் நேர் செய்யப்படவேண்டும்.
3. திட்ட இனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருள் மற்றும் நிதி ஒதுக்கீட்டினை முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்
21/10/17